2010 மே 12]

அமைவதற்கு, நபார்டு வங்கியினுடைய ஒப்புதலுக்கு அனுப்பப்படுகிற பட்டியலிலே அந்தப் பாலம் இடம்பெறும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 180, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜெயபால், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

180—

மென்பொருள் பூங்கா

***22099—திரு. எஸ். ஜெயபால்:**

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் மென்பொருள் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கன்னியாகுமரி மாவட்டத்தில் மென்பொருள் பூங்கா அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜெயபால்.

திரு. எஸ். ஜெயபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் படித்தவர்கள் அதிகம் நிறைந்த மாவட்டம். ஆனால் அதே வேளையில், வேலைவாய்ப்பில், தொழில் வளர்ச்சியில் மிகவும் பின்தங்கிய மாவட்டம் கன்னியாகுமரி மாவட்டம். எனவே, கன்னியாகுமரி மாவட்டத்தில் மென்பொருள் பூங்கா அமைத்தால், அங்கே பல்லாயிரக்கணக்கான கணினி அறிவியல் கல்வி கற்ற மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்கின்ற ஓர் எதிர்பார்ப்பு இருந்துகொண்டிருக்கிறது. எனவே, அமைச்சர் அவர்கள் அந்த மாவட்டத்தின் சூழ்நிலையைக் கருதி, தன்னுடைய பதிலை மறுபரிசீலனை செய்து, கன்னியாகுமரி மாவட்டத்தில் மென்பொருள் பூங்கா அமைப்பதற்கு வழிவகை செய்வார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

[2010 மே 12

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே துறை சார்ந்த கேள்விகள், கிட்டத்தட்ட 90 சதவிகித உறுப்பினர்கள் தங்கள் மாவட்டத்தில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்கப்படுமா என்ற வினாவை எழுப்புகிறார்கள். ஒரு சிறு விளக்கத்தை நான் இங்கு அளிக்க விரும்புகின்றேன்.

அனைத்து மாவட்டங்களிலும் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க அரசு கருதினாலும், industrial demand, அதாவது இத்துறையின் தேவைக்கு ஏற்றவாறுதான், பூங்காக்களின் எண்ணிக்கையை எதிர்காலத்தில் அதிகரிக்க முடியும். தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களில் இரண்டு வகைகள் உண்டு. ஒன்று, அரசே உள்கட்டமைப்பு வசதிகளை அமைத்து, முதலீட்டாளர்களை ஈர்ப்பது; மற்றொன்று, தனியார் நிறுவனங்கள் நடத்துவது. இன்று தமிழ்நாட்டில் நமது துணை முதல்வர் அவர்களின் தலைமையின்கீழ் தொழில் துறையில் இரண்டு பெரிய Tidel Parks சென்னையில் சிறப்பாக இயங்கி வருகின்றன. அதேபோல, சென்னை உட்பட 8 இரண்டாம் நிலை நகரங்களில் மொத்தம் 9 பூங்காக்களை இத்துறை நமது முதல்வர் அவர்களின் தலைமையில் அமைத்து வருகிறது. இதுவரை நமது முதல்வர் டாக்டர் கலைஞர் ஒருவர் மட்டுந்தான் அதிக அளவில், தொலைநோக்குப் பார்வையோடு அரசு சார்ந்த தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களை தமிழ்நாட்டில் அமைத்து வருகிறார்கள். இவ்வருடம் கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, நெல்லை ஆகிய இடங்களில் பணிகள் முடிவடையும்.

மேலும் அடுத்த இரண்டு ஆண்டுகளில் இத்துறையின் வளர்ச்சி 14 சதவிகிதமாக அதிகரிக்கும் என்றும், அப்பொழுது புதிதாக 4 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு பெருகும் எனவும் கருதப்படுகிறது. தற்போது 3½ இலட்சம் நபர்கள் மென்பொருள் நிறுவனத்தில் பணிபுரிகிறார்கள். வேலைவாய்ப்பு பெருகும்போது, அருகிலுள்ள மாவட்டங்களில் படித்த இளைஞர்களுக்கும் வேலை கிடைக்கும், பயன்பெறுவார்கள். அதனால் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த இளைஞர்கள் நெல்லை மாவட்டத்திற்கு வந்து பயனடையுமாறு கேட்டுக்கொண்டு, விடைபெறுகிறேன்.

2010 மே 12]

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜெயபால்.

திரு. எஸ். ஜெயபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் திருப்தியான ஒரு பதிலைச் சொன்னார்களென்றாலும், தமிழகத்தைப் பொறுத்தவரையில், மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது இந்தத் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைப்பது, மென்பொருள் பூங்கா அமைப்பது தமிழகத்திலே சிறப்பாக பல இடங்களிலே நடைபெற்று வருகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியதுபோன்று, சென்னையைச் சுற்றியுள்ள மாவட்டங்கள், அதைப்போன்ற வளர்ச்சி பெற்ற மாவட்டங்களிலே இப்படிப்பட்ட தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் அமைக்கப்பட்டு வருகிறதென்று சொன்னார்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால், வளர்ச்சி பெற்ற மாவட்டத்திலே அமைப்பதைவிட, வளர்ச்சியில்லாத மாவட்டத்தில் அமைப்பது அந்த மாவட்ட வளர்ச்சிக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும்.

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், தொழில் வளர்ச்சியில் மிகவும் பின்தங்கிய ஒரு மாவட்டம். அங்கே குளச்சலிலே வணிகத் துறைமுகம் வரும்; அதன்மூலம் ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கப்படுமென்கின்ற எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால், அது நடைபெறவில்லை. அதேபோன்று இரப்பர் பூங்கா அமைக்கப்படும், அதன்மூலமாக 10,000 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்குமென்ற எதிர்பார்ப்பு இருந்தது. அந்த வாய்ப்பும் இல்லாமல் இருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது.

எனவே, இந்த மென்பொருள் பூங்கா கன்னியாகுமரி மாவட்டத்திலே அமைக்கப்படுமென்று சொன்னால், அதன்மூலமாகவாவது 50,000 பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். அதன்மூலமாக, அங்கே இருக்கக்கூடிய இலட்சக்கணக்கான படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படுமென்ற எதிர்பார்ப்பு அங்கே இருந்து கொண்டிருக்கிறது. அமைச்சர் அவர்கள், பக்கத்து மாவட்டத்திலே சென்று வேலைவாய்ப்பைத் தேடிக்கொள்ள வேண்டுமென்ற பதிலைச் சொன்னாலும், எங்கள் மாவட்டம் வளர்ச்சி பெற

வேண்டுமென்கின்ற உணர்வு எங்களுக்கு இருப்பதால், எங்களுடைய உணர்வை மதிக்கின்ற வகையிலே தென் மாவட்டத்தைச் சார்ந்த அமைச்சர் அவர்கள் தென் மாவட்ட வளர்ச்சியைக் கருத்திலே கொண்டு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜெயபால், சுருக்கமாகக் கேள்வியைக் கேளுங்கள். மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று சொல்லிவிட்டு, உட்காருங்கள்.

திரு. எஸ். ஜெயபால்: கன்னியாகுமரி மாவட்டத்திலும் மென்பொருள் பூங்கா அமைப்பதற்கு முயற்சி செய்ய வேண்டுமென்று உங்களைப் பணிவோடு கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மாமன்றத்தின் உறுப்பினரின் உணர்ச்சிகளை மதிக்கின்றேன். நிச்சயமாக எதிர்காலத்தில் இந்தத் துறை இன்னும் அதிக அளவில் வளர்ச்சியடைந்து, வேலைவாய்ப்புகள் பெருகும்போது, priority basis-ல் நிச்சயமாக, உங்கள் மாவட்டத்திலே இடம் கிடைத்தால் ஒரு பூங்கா அமைப்பதற்கு இவ்வரசு எல்லா வகையிலும் முயற்சி செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடுகள்)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. உரிமை மீறல் பிரச்சினை

'முரசொலி'யில் எழுதியுள்ள கடிதம் குறித்து மாண்புமிகு முதலமைச்சர்மீது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடன்பிறப்புகளுக்கு ஒரு